செ.வெ.எண்: 18 நாள்: 06.01.2017

# அன்னவாசல் வட்டாரத்தில் வேளாண்மைத்துறையின் சார்பில் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் வட்டாரத்தில் வேளாண்மை துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (6.1.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வேளாண்மைத்துறையின் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

தமிழகஅரசு வேளாண்மைத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி நமது மாவட்டத்தில் உள்ள அன்னவாசல் வட்டாரத்தில் ஆயிங்குடியில் வேளாண்மை துறையின் மாவட்ட நீர்வடிப்பகுதி முகமை சார்பில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் 8வது தொகுதியின் கீழ் ரூ.20000 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட கிணறு புனரமைத்தல் பணியையும், ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்ட குளத்தின் பணியையும், மதியநல்லூரில் ரூ.60000 மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட மழைநீர் செறிவூட்டும் அமைப்பு பணியையும், ரூ.20000 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட கிணறு புனரமைத்தல் பணியையும் என மொத்தம் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வளர்ச்சிப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது குளங்களில் மழைநீர் சரியாக வரும் வகையில் வரத்து வாரிகளை தொடர்ந்து சீரமைத்து பராமரிக்கவும், கிணறுகளை உரிய முறையில் பயன்படுத்தவும், மேலும் நடைபெறும் பணிகளை விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அன்னவாசல் வட்டாரம், சித்தன்னவாசலில் விவசாயியின் வயலில் மழையின்றி கருகிய பயிரினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் வேளாண்மை இணை இயக்குநர் திரு.அண்ணாமலை மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**